தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணிகை

திருத்தணிகை வட்டம், திருவள்ளூர் மாவட்டம் – 631 209.

ந.க.எண் 893 /2023/அ1 நாள் : 26.07.2023

## வேலை வாய்ப்பு கோரும் விளம்பர அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணிகை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மற்றும் அதன் உபத்திருக்கோயில்களில் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரப்படியான காலி பணியிடங்களுக்கு, பணியாளர்களை பணி நியமனம் செய்ய இந்து மதத்தை சார்ந்த தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து நிபந்தனைகளுக்குட்பட்டு **31.08.2023–பிற்பகல் 5.45–மணி வரை** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிடங்கள் விவரம்**

| பதவி பெயர் / எண்ணிக்கை / சம்பள விகிதம் | கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள் |
|---|---|
| **திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் (முதன்மை திருக்கோயில்)** | |
| ஓதுவார் – 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 18500 –58600<br>(LEVEL - 22/1) | 1. தமிழில் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.<br>2. சமய நிறுவனங்களால் அல்லது அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் தேவாரப் பாடசாலையில் இது தொடர்புடைய துறையில் மூன்றாண்டு படிப்பினை மேற்கொண்டதற்காக வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| பரிச்சாரகர் – 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 15900 – 50400<br>(LEVEL - 17/1) | 1. தமிழில் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்<br>2. திருக்கோயிலில் நடைபெறும் பூஜை முறைகள் மற்றும் நைவேத்தியம் தயாரித்தல். |
| வேத பாராயணம் – 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 15700 – 50000<br>(LEVEL – 16/1) | 1. தமிழில் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.<br>2. யாதொரு சமய நிறுவனங்களால் அல்லது அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆகமப்பள்ளி அல்லது வேதபாடசாலையில் தொடர்புடைய துறையில் மூன்றாண்டு படிப்பினை மேற்கொண்டதற்கான சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| **உபகோயிலான திருத்தணி அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், அர்ச்சகர் பணியிடம்–1<br>உபகோயிலான சந்தானவேணுகோபாலபுரம், அருள்மிகு சந்தானவேணுகோபாலசுவாமி திருக்கோயில், அர்ச்சகர் பணியிடம்–1<br>உபகோயிலான கரிம்பேடு, அருள்மிகு நாதாதீஸ்வரசுவாமி திருக்கோயில், அர்ச்சகர் பணியிடம்–1<br>உபகோயிலான ஆற்காடுகுப்பம், அருள்மிகு சோளீஸ்வரசுவாமி திருக்கோயில், அர்ச்சகர் பணியிடம்–1<br>ஆக மொத்தம் 4 அர்ச்சகர் பணியிடங்கள்** | |
| அர்ச்சகர் – 04 பணியிடம்<br>சம்பள விகிதம் 11600 – 36800<br>(LEVEL - 12/1) | 1. தமிழில் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்<br>2. யாதொரு சமய நிறுவனங்களால் அல்லது அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆகமப்பள்ளி அல்லது வேதபாடசாலையில் தொடர்புடைய துறையில் ஓராண்டு படிப்பினை மேற்கொண்டதற்கான சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர் 01.07.2021 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 45 வயது மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்ப படிவத்தினை அலுவலக வேலை நாட்களில், அலுவலக நேரத்தில் விண்ணப்ப படிவம், தகுதி விவரங்கள், நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய விண்ணப்ப படிவத்தினை, திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில், அலுவலக நேரங்களில் **28.07.2023 முதல் 30.08.2023 பிற்பகல் 5.45 மணி வரை** நேரில் வந்து கேட்டும், விண்ணப்பித்தும், தெரிந்தும் பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், திருக்கோயிலின் இணைய தளத்தில் **https://hrce.tn.gov.in மற்றும் https://tiruttanimurugan.hrce.tn.gov.in** என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம்.
3. இந்த வேலைவாய்ப்பு விளம்பர அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்கள் **31.08.2023–ம் தேதி மாலை 5.45 மணிக்கு** பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை **இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணிகை, திருவள்ளூர் மாவட்டம் அஞ்சல் முகவரி 631 209 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.**

**க. ஸ்ரீதரன்**
**அறங்காவலர் குழுத்தலைவர்**

**பா. விஜயா, எம்.காம்,எம்.எல்.,**
**இணை ஆணையர்/செயல் அலுவலர் (கூ.பொ)**

**அறங்காவலர்கள் : ஜி. உஷாரவி, கோ. மோகனன், வி. சுரேஷ்பாபு, மு. நாகன்**

செ.ம.தொ.இ./ 864 /வரைகலை/2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"